# <u>பத்திரிக்கைச்செய்தி</u>

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் மின்னணு குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மாற்றம் செய்து வழங்கப்பட்ட மின்னணு குடும்ப அட்டைகளில் உள்ள தவறுகள் மற்றும் புகைப்படம் இல்லாத மின்னணு குடும்ப அட்டைகள் ஆகியவற்றினை திருத்தம் செய்ய சிறப்பு குறைதீர் முகாம்கள் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி நியாயவிலை கடைகளிலும் 05.07.2017(புதன்கிழமை), 06.07.2017(வியாழக்கிழமை) மற்றும் 08.07.2017(சனிக்கிழமை) மூன்று தினங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளதால் பொதுமக்கள் அனைவரும் தங்களது குறைகளை நிவர்த்தி செய்ய தங்கள் பகுதி நியாயவிலை கடைகளுக்குச் சென்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மின்னணு குடும்ப அட்டை வரப்பெறாதவர்கள் புகைப்படம், ஆதார் அட்டை மற்றும் பழைய குடும்ப அட்டை ஆகியவற்றினையும், திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள் திருத்தத்திற்குரிய ஆதாரங்களையும் சமர்ப்பித்து திருத்தம் மேற்கொள்ளலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் ,
கரூர்.